# அதிக மகசூல் அளிக்கும் சிறுதானிய வகைகளை உருவாக்க வேண்டும்: வேளாண் விஞ்ஞானிகளுக்கு ஆளுநர் ஆர்.என்.ரவி வேண்டுகோள்



**கோவை:** தரமான, மேம்பட்ட, அதிக மகசூல் அளிக்கும் சிறுதானிய வகைகளை உருவாக்கி, அது குறித்து விவசாயிகளுக்கு வேளாண் விஞ்ஞானிகள் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் என ஆளுநர் ஆர்.என்.ரவி தெரிவித்தார்.

சிறுதானிய பயிர்களுக்கான பன்னாட்டு கருத்தரங்கம் கோவையிலுள்ள தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தில் நேற்று நடைபெற்றது. மேலும், 10 உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுடன் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டது.

இந்த நிகழ்ச்சியில் பங்கேற்ற ஆளுநர் ஆர்.என்.ரவி பேசியதாவது: நாம் அரிசியை அதிகம் உற்பத்தி செய்வதன் காரணமாக சில பிரச்சினைகளும் ஏற்படுகின்றன. தமிழகத்தில் அதிகப்படியான சர்க்கரை நோயாளிகள் உள்ளதாக மருத்துவர்கள் கூறுகின்றனர். இதற்கு அரிசியை அதிகப்படியாக நாம் சார்ந்திருப்பது ஒரு காரணம் என்கின்றனர்.

பல்வேறு வகையான உணவு வகைகளை நாம் கொண்டிருந்தாலும், அதில் பெரும்பாலானவை அரிசியை அடிப்படையாக கொண்டு செய்யப்படுகின்றன. வாழ்க்கை முறை மாற்றங்களால் ஏற்படும் நோய்களால் இறப்பவர்களின் எண்ணிக்கையானது, பெருந்தொற்றால் உயிரிழப்பவர்களின் எண்ணிக்கையைவிட அதிகமாக உள்ளது. ஆரோக்கியமான உணவு உற்பத்தியில் நாம் தன்னிறைவு பெற

வேண்டுமெனில் மாற்றுப்பயிர்களை நாம் நாட வேண்டும். சிறுதானியங்கள், அதற்கு விடையாக இருப்பவை.

சிறுதானியங்கள், கடினமான காலநிலையையும் சமாளித்து வளரக்கூடியவை. மேலும் சத்துமிகுந்தவை. நீர் குறைவாக உள்ள இடங்களிலும் அவற்றை பயிரிட முடியும். சிறுதானிய உற்பத்தியை நோக்கி நாம் நகர வேண்டும். சிறுதானிய உற்பத்தியில் இந்தியா மற்ற நாடுகளுக்கு முன்னுதாரணமாக இருக்க வேண்டும். அதற்கு பங்காற்றும் வகையில், தரமான, மேம்பட்ட, அதிக மகசூல் அளிக்கும் சிறுதானிய வகைகளை உருவாக்கி, அது குறித்து விவசாயிகளுக்கு வேளாண் விஞ்ஞானிகள் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்.

**மீண்டும் செங்கோல்:** 1947-ல் இந்தியா சுதந்திரம் அடைந்தபோது, பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் ஆட்சி அதிகாரத்தை ஒப்படைக்க ஏதேனும் சடங்கு இருக்கிறதா என தெரிந்துகொள்ள விரும்பினர்.

அப்போதைய பிரதமர் ஜவஹர்லால் நேருவிடம், அதிகாரத்தை மாற்ற என்ன நடைமுறை என்று கேட்டனர். நேரு, ராஜாஜியிடம் இதுபற்றி கேட்டார். ராஜாஜி, திருவாவடுதுறை ஆதீனத்தை அணுகினார். சென்னையில் புதிய செங்கோல் தயாரிக்கப்பட்டு, மவுண்ட்பேட்டனிடம் அளிக்கப் பட்டது.

தொடர்ந்து திருஞான சம்பந்தரின் தேவார பதிகத்தை பாடி, அன்றைய பிரதமர் நேருவிடம் அந்த செங்கோல் அளிக்கப்பட்டது. அந்த வழக்கத்தை நாம் எப்படியோ மறந்துவிட்டோம். அலகாபாத் அருங்காட்சியகத்தில் உள்ள அந்த செங்கோல் புதிய நாடாளுமன்ற கட்டிடத்தில் நிறுவப்பட உள்ளது. இவ்வாறு அவர் பேசினார்.

பின்னர், விவசாயி ஒருவர், "உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களைச் சேர்ந்தவர்களை, நாட்டின் பிற பகுதியில் உள்ள உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் எவ்வாறு செயல்படுகிறது என்பதை அறிய சுற்றுலா அழைத்துச் செல்ல வேண்டும்" என கோரிக்கை விடுத்தார். இந்த கோரிக்கையை மத்திய அரசின் கவனத்துக்கு கொண்டு செல்வதாக ஆளுநர் ஆர்.என்.ரவி தெரிவித்தார்.

# எனது நாடாளுமன்றம், எனது பெருமை - புதிய நாடாளுமன்ற வீடியோவை பகிர பிரதமர் அழைப்பு



**புதுடெல்லி**: எனது நாடாளுமன்றம், எனது பெருமை என்ற ஹேஷ்டேக்குடன் புதிய நாடாளுமன்ற வீடியோவை சமூக வலைதளங்களில் பகிர வேண்டும் என்று பிரதமர் நரேந்திர மோடி அழைப்பு விடுத்துள்ளார்.

கடந்த 2014-ம் ஆண்டில் பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான பாஜக அரசு மத்தியில் பதவியேற்றது. அதன்பிறகு இந்தியா முழுவதும் ஆங்கிலேய ஆட்சி சுவடுகளின் அடையாளத்தை மாற்ற மத்திய அரசு முடிவு செய்தது. இதன்படி பிரதமர் இல்லம் அமைந்துள்ள ரேஸ் கோர்ஸ் சாலை, லோக் கல்யாண் சாலை என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

குடியரசு தின விழாவின் பாசறை திரும்பும் அணிவகுப்பில் ஆங்கிலேயர்களின் பாடல் நீக்கப்பட்டு, இந்திய பாடல் சேர்க்கப்பட்டது. அந்தமான்-நிகோபர் தீவில் ஆங்கிலேயர் பெயர்களில் இருந்த தீவுகளுக்கு சுபாஷ் சந்திர போஸ் உள்ளிட்ட இந்திய தலைவர்களின் பெயர்கள் சூட்டப்பட்டன. ஆங்கிலேயர் காலத்தில் வடிவமைக்கப்பட்ட இந்திய கடற்படையின் கொடி மாற்றி அமைக்கப்பட்டது.

**ஆங்கிலேயர் சுவடுகள் நீக்கம்:** இந்த வரிசையில் ஆங்கிலேயர் கால சுவடுகளை நீக்கும் வகையில் டெல்லியில் புதிய நாடாளுமன்றம் கட்டப்பட்டு உள்ளது. இதனை பிரதமர் நரேந்திர மோடி நாளை திறந்து வைக்கிறார்.

புதிய நாடாளுமன்றத்தின் வெளிப்புற, உட்புற தோற்றம் குறித்த வீடியோவை பிரதமர் நரேந்திர மோடி ட்விட்டரில் நேற்று வெளியிட்டார். வீடியோவுடன் அவர் வெளியிட்ட பதிவில் கூறியிருப்பதாவது: டெல்லியில் கட்டப்பட்டுள்ள புதிய நாடாளுமன்றம் ஒவ்வொரு இந்தியரையும் பெருமிதம் கொள்ள செய்கிறது. வரலாற்று சிறப்புமிக்க புதிய நாடாளுமன்றத்தின் கம்பீரம், அழகு வீடியோவில் பிரதிபலிக்கிறது. இந்த வீடியோவை அதிகம் பகிர வேண்டுகிறேன். அதில் உங்கள் கருத்துகளையும் பதிவிடுங்கள். எனது நாடாளுமன்றம், எனது பெருமை என்ற ஹேஷ்டாக்கை மறக்காமல் பதிவிட்டு வீடியோவை அதிகமாக பகிருங்கள். இவ்வாறு பிரதமர் மோடி அழைப்பு விடுத்துள்ளார்.

## உலகின் துயரமான நாடுகள் பட்டியலில் ஜிம்பாப்வே முதலிடம்: இந்தியா..?



**நியூயார்க்:** 2022-ஆம் ஆண்டின் உலகின் துயரமான நாடுகளின் பட்டியலை பொருளாதார நிபுணர் ஸ்டீவ் ஹன்கே வெளியிட்டிருக்கிறார். இந்தப் பட்டியலில் இந்தியாவுக்கு 103-ஆவது இடம் கிடைத்துள்ளது.

இப்பட்டியல் குறித்து பொருளாதார நிபுணர் ஸ்டீவ் ஹான்கே கூறும்போது, “157 நாடுகளில் நிலவும், வேலையின்மை, பணவீக்கம், வங்கிக் கடன், ஜிடிபி ஆகியவற்றின் அடிப்படையில் இந்தப் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது” என்று தெரிவித்துள்ளார்.

**இந்தப் பட்டியலில் முதல் 10 இடங்களில் உள்ள நாடுகள்:**

- ஜிம்பாப்வே
- வெனிசுலா
- சிரியா
- லெபனான்
- சூடான்
- அர்ஜெண்டினா
- ஏமன்
- உக்ரைன்
- கியூபா
- துருக்கி

வேலையின்மை, பணவீக்கம் காரணமாகவே மேற்கூறிய நாடுகள் துயர் நிலையில் இருப்பதாகவும் அவரது பட்டியல் கூறுகிறது.

**ஜிம்பாப்வே முதலிடம் ஏன்?** - ஜிம்பாப்வேயில் பணவீக்கம் உச்ச நிலையை தொட்டுள்ளது. மேலும், அதிபர் எம்மர்சனின் கொள்கைகள் மக்களுக்கு கூடுதல் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளதாகவும் இப்பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இப்பட்டியலில் இந்தியா 103-ஆவது இடத்தில் உள்ளது. இந்தியாவில் வேலையின்மைதான் முக்கியப் பிரச்சினையாக இருப்பதாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

அதேநேரத்தில் பட்டியலில் கடைசி பத்து இடங்களில் மால்டா (148), டோகோ( 149), தாய்லாந்து (150), நைகர் (151), தைவான் (152), மலேசியா (153), ஜப்பான் (154), அயர்லாந்து (155), குவைத் (156), ஸ்விட்சர்லாந்து (157) ஆகிய நாடுகள் இடம்பெற்றுள்ளன. இந்நாடுகளில் வேலையின்மை மற்றும் பணவீக்கம் குறைந்த சதவீதத்தில் பதிவாகி இருப்பதாகவும் கூறப்பட்டுள்ளது.

EVA STALIN IAS ACADEMY

# இந்தியாவின் வளர்ச்சி 6.5% தாண்டும்: தலைமை பொருளாதார ஆலோசகர் தகவல்



**புதுடெல்லி:** நடப்பு நிதி ஆண்டில் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி 6.5% தாண்டும் என்று தலைமை பொருளாதார ஆலோசகர் ஆனந்த நாகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

சர்வதேச அளவில் பொருளாதார மந்தநிலை காணப்படுகின்ற போதிலும், இந்தியாவில் தொழில் செயல்பாடுகள் ஆரோக்கியமாக உள்ளன. இதனால், சர்வதேச நெருக்கடிக்கு மத்தியிலும் இந்தியாவின் வளர்ச்சி விகிதம் தொடர்ந்து அதிகரிக்கும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த ஆண்டில் ரஷ்யா - உக்ரைன் இடையே போர் தொடங்கியதையடுத்து சர்வதேச அளவில் பணவீக்கம் தீவிரமடைந்தது. இதைக் கட்டுப்படுத்த மத்திய வங்கிகள் வட்டி விகித்தை அதிகரித்து வருகின்றன. இந்தச் சூழலில் உலக அளவில் பொருளாதார வளர்ச்சி பாதிக்கப்பட்டுள்ளது. எனினும், இந்தியாவின் பொருளாதாரம் மேம்பட்ட நிலையில் இருப்பதாக சர்வதேச செலாவணி நிதியம், உலக வங்கி உள்ளிட்ட சர்வதேச அமைப்புகள் தெரிவித்துள்ளன.

இந்நிலையில், தலைமை பொருளாதார ஆலோசகர் ஆனந்த நாகேஸ்வரன் கூறும்போது, ‘‘நடப்பு நிதியாண்டில் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி 6.5 சதவீதத்துக்கு மேல் அதிகரிக்கும்.

இந்தியாவில் மக்களிடையே கடன் தேவை அதிகரித்து இருக்கிறது. இது தொழில் செயல்பாடுகள் ஆரோக்கியமான நிலையில் இருப்பதற்கான அறிகுறி. சர்வதேச அளவில் காணப்படும் பொருளாதார நெருக்கடியால் இந்தியா பெரியஅளவில்

EVA STALIN IAS ACADEMY

பாதிப்பை எதிர்கொள்ளவில்லை. சவாலாக இருந்த பணவீக்கம் தற்போதுகட்டுக்குள் வரத் தொடங்கியுள்ளது. அந்த வகையில் இந்தியா நடப்பு நிதி ஆண்டில் குறிப்பிடத்தக்க வளர்ச்சியை எட்டும்” என்றார்.

EVA STALIN IAS ACADE